நீர்வளத்துறை

அனுப்புதல்

பொறி.ச.குமார், பி.இ.,
செயற்பொறியாளர். நீவது.,
மேல்பெண்ணையாறு வடிநில கோட்டம்.
தருமபுரி -5. Ph: 04342-230990.

பெறுதல்

தி/வா. மகா அஜய் ஸ்பின்னர் பிரைவேட் லிமிடெட்,
எம்.ஜி.பாரத் குமார் இயக்குனர்,
கதவு எண். 1-7, நத்தமேடு,
மங்களம் நாமக்கல்
நாமக்கல் மாவட்டம் - 637 501.

க.எண். 5957 / கோ. 180 / 2023 / வ1 / நாள்: 25.08.2023 (23/10)

அய்யா,

பொருள் : தருமபுரி மாவட்டம், காரிமங்கலம் வட்டம், கெரகோடஅள்ளி கிராமத்தில் புல எண். 537/B2 - ல் உள்ள கால்வாயின் குறுக்கே பாலம் அமைத்து பயன்படுத்திக் கொள்ள அனுமதி வழங்குவது -தொடர்பாக.

பார்வை : 1. தங்கள் கடித நாள். 03-10-23

2. இவ்வலுவலக கடித நாள். DB / கோ. 180 / 2023 / வ1 / நாள். 25-09-2023.

----------------

பார்வை 2-ல் காணும் இவ்வலுவலக கடிதத்தில் தெரிவித்துள்ளபடி தருமபுரி மாவட்டம், காரிமங்கலம் வட்டம், கெரகோடஅள்ளி கிராமத்தில் புல எண். 537/B2-ல் உள்ள கால்வாயை கடந்து செல்ல சுமார் 5.00 மீ அகலம் மற்றும் 12 மீ நீளத்திற்கு பாலம் அமைத்து பயன்படுத்த தரைவாடகையாக மூன்று வருடத்திற்கு ரூ.7,599/-(ரூபாய் ஏழாயிரத்து ஐந்நூற்று தொண்ணூற்று ஒன்பது மட்டும்) **Union Bank of India, Karimangalam D.D.No. 068370, Date: 27.09.2023** மற்றும் GST 18% ரூ.1,368/- (ரூபாய் ஓராயிரத்து முந்நூற்று அறுபத்து எட்டு மட்டும்) **Union Bank of India, Karimangalam D.D.No. 068371, Date: 27.09.2023** துறைக்கு செலுத்தி உள்ளதால் பின்வரும் வரும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு சிறுபாலம் அமைக்க அனுமதி அளிக்கப்படுகிறது.

நிபந்தனைகள்:-

1. தருமபுரி மாவட்டம், காரிமங்கலம் வட்டம், கெரகோடஅள்ளி கிராமத்தில் புல எண். 537/B2 -ல் வரைபடத்தில் சுட்டிகாட்டி உள்ள இடத்தில் மட்டுமே கால்வாயின் குறுக்கே சிறுபாலம் அமைத்து கொள்ள வேண்டும்.
2. கால்வாயின் எந்த பகுதிக்கும் எவ்வித சேதாரமும் ஏற்படாமல் பணி செய்ய வேண்டும்.
3. கால்வாயின் நிலத்தை பயன்படுத்தி கொள்ள தற்போது மூன்று வருடங்களுக்கு தரை வாடகை செலுத்தப்பட்டுள்ளது.
4. அதன் பின் ஒவ்வொரு வருடமும் அந்த வருடத்தின் அப்போதைய வழிகாட்டு மதிப்பு (Guideline Value) படி இவ்வலுவலகத்தில் திருந்திய தரைவாடகையினை நிர்ணயம் பெறப்பட்டு, அதன்படி திருந்திய தரைவாடகையினை தவறாமல் செலுத்த வேண்டும்.
5. கால்வாயில் நீர் தங்கு தடையின்றி செல்லும் வகையில் அவ்வப்போது தங்களால் பராமரிக்கப்பட வேண்டும்.
6. கால்வாயில் இருந்து வரும் நீரோட்டத்தை பாதிக்கின்ற வகையில் எவ்வித குறுக்கு கட்டிடங்கள் கட்டப்படக்கூடாது.

7. தங்களால் சமர்ப்பிக்கப்படும் ஆவணங்களில் எவையேனும் போலியானவை என பிற்காலத்தில் தெரிய வந்தால் இத்துறை மூலம் வழங்கப்படும் அனுமதி உடனடியாக ரத்து செய்யப்படும்.
8. கால்வாயில் தண்ணீர் செல்ல எந்தவித இடையூறும் இல்லாமல் அரசு சொத்துக்கும் பொதுமக்களுக்கும் எவ்வித இடையூறும் இல்லாமல் பணி மேற்கொள்ள வேண்டும்.
9. மேற்கண்ட நிபந்தனை மீறினால் வழங்கிய அனுமதியை முன் அறிவிப்பு இன்றி திரும்ப பெற இத்துறைக்கு அதிகாரம் உண்டு.
10. இந்த அனுமதி தற்காலிகமானது. அரசுக்கு தேவைப்படும் போதோ அல்லது மேற்கண்ட நிலம் அரசின் வேறு திட்டங்களுக்கோ / பயன்பாட்டிற்கோ தேவைப்பட்டால் இந்த அனுமதி தங்களுக்கு எவ்வித முன்அறிவிப்பின்றி ரத்து செய்ய இத்துறைக்கு முழு உரிமை உண்டு.
11. இந்த அனுமதியை வேறு எவருக்கும் மாற்றக்கூடாது. தங்கள் நிலம் வரும் எதிர்காலத்தில் வேறு நபருக்கு மாற்றப்பட்டால் அவர்களால் தரை வாடகையை தவறாமல் செலுத்தப்பட வேண்டும். இல்லையெனில் உரிமை ரத்து செய்வதுடன் அப்பாலம் இத்துறையால் அப்புறப்படுத்தப்படும்.
12. இத்துறையிடமிருந்து அனுமதி கிடைக்கப்பெற்ற 6 (ஆறு) மாதங்களுக்குள் பாலப்பணிகள் துவக்கப்பட வேண்டும். ஆறு மாதங்கள் கடந்துவிட்டால் அறிவிக்கப்பட்ட அனுமதி செல்லாது இத்துறையிடம் தனியாக மறு அனுமதி கண்டிப்பாக பெறப்பட்டு பின்பு தான் பாலம் கட்டப்பட வேண்டும்.
13. இந்த தரைவாடகை நிர்ணயம் செய்வது தொடர்பாக ஏதாவது புகார் மனு நீர்வளதுறையினரால் பெறப்பட்டால் இப்பாலம் கட்டுவதற்கான அனுமதி இரத்து செய்யப்படும். வாடகை தொகை எக்காரணத்தை கொண்டும் திருப்பளிக்க இயலாது. தங்களால் இழப்பீடு ஏதும் பெற தகுதி கிடையாது என்று தெரிவிக்கப்படுகிறது.
14. இவ்வனுமதியினால் பொதுமக்களிடமிருந்தோ அல்லது இத்துறையின் உயர் அதிகாரிகளிடமிருந்தோ ஆட்சேபனை ஏதும் வரப்பெற்றால் இவ்வனுமதி உடனடியாக இரத்து செய்யப்படும்.

3/10

(O/C) செயற்பொறியாளர், நீவது,
மேல்பெண்ணையாறு வடிநில கோட்டம், தருமபுரி

03/10/23 3/10/23

நகல்: உதவி செயற்பொறியாளர், சிஆர்.பி. உபகோட்டம், தருமபுரி அவர்களுக்கு தொடர் நடவடிக்கைக்காக அனுப்பப்படுகிறது.

3/10

(O/C) செயற்பொறியாளர், நீவது,
மேல்பெண்ணையாறு வடிநில கோட்டம், தருமபுரி.

03/10/23 3/10/23